# NSW HEALTH

## COVID-19 Key Points – Wednesday 22 September 2021

- தடுப்பூசியின் விகிதத்தைப் பொறுத்தவரை, ஒற்றை மருந்தளவைப் பெறுவதில் 83%-ஐயும், இரண்டு மருந்தளவுகளையும் பெற்றுக்கொள்வதில் 54.2%-ஐயும், நியூ சவுத் வேல்ஸ் தற்போது எட்டியுள்ளது. இது மிகவும் சிறப்பாகும்.
- நியூ சவுத் வேல்ஸ்-இல் இப்போது 9 மில்லியனுக்கும் அதிகமான தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன, அத்துடன் 12-15 வயதுடையவர்களில் 25% ஆனோர் ஏற்கனவே ஒரு தடுப்பூசியைப் பெற்றுள்ளனர். அஸ்ட்ராசெனீக்கா (AstraZeneca), ஃபைசர் (Pfizer) மற்றும் மொடேர்னா (Moderna) தடுப்பூசிகள், உங்களுக்கு அருகாமையில் கிடைக்கின்றன - உங்களுடைய தடுப்பூசிக்கு இன்றே nsw.gov.au-இல் பதிவு செய்யுங்கள்.
- நேற்று இரவு 8 மணிக்கு முன்னரான 24 மணி நேரத்தில், 1,035 பேர் உள்ளூர் கோவிட்-19 நோய்த்தொற்றால் பீடிக்கப்பட்டுள்ளார்கள். கவலைக்கிடமாக, ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர்.
- ஓபரொன் (Oberon)-இல், அதிக அளவு நோய்க்கிருமிகள் கழிவுநீரில் கண்டறியப்பட்டுள்ளன. கண்டறியப்படாத எந்த நோய்த்தொற்றாளர்களையும் நாங்கள் தவறவிடாமல் இருப்பதை உறுதிசெய்ய, சிறு நோயறிகுறிகள் இருந்தாலும்கூட, தயவுசெய்து முன் வந்து, பரிசோதனையை மேற்கொள்ளுங்கள். இல்லவர்ரா (Illawarra) பிராந்தியத்திலும் அதிகரித்து வரும் நோய்த்தொற்றாளர்கள் எண்ணிக்கையை நாங்கள் காண்கிறோம். மகிழ்ச்சிகரமாக, வடக்கு நியூ சவுத் வேல்ஸ்-இல் புதிய நோய்த்தொற்றாளர்கள் எவரும் பதிவாகவில்லை.
- உங்களுக்குத் தடுப்பூசி போடப்பட்டிருந்தால், அக்டோபர் மாத பிற்பகுதியில், 'சர்வீஸ் நியூ சவுத் வேல்ஸ்' செயலி (Service NSW app) ஊடாக, உங்கள் தடுப்பூசிச் சான்றிதழை நீங்கள் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். அதற்கு முன், நீங்கள் 'மெடிக்கேர்' செயலி (Medicare App) மூலம், அல்லது உங்கள் பொதுமருத்துவரிடமிருந்து (ஜி.பி.- GP) கிடைக்கப்பெறும் உங்கள் நோய்த்தடுப்புப் பதிவின் நகலூடாக அதை அணுகலாம்.
- நாங்கள் வியக்கத்தக்க அளவிற்குச் சிறப்பாகச் செயற்பட்டுக்கொண்டிருக்கிறோம், ஆனால் நாங்கள் கட்டாயம் இத் திட்டத்துடன் ஒன்றி இருக்கவேண்டும், அத்துடன் நாம் திருப்தி அடைந்துவிடக்கூடாது. உங்கள் பகுதியில் உள்ள கட்டுப்பாடுகளை நீங்கள் அறிந்துவைத்திருப்பதைத் தயவுசெய்து உறுதிசெய்து கொள்ளுங்கள்: https://www.nsw.gov.au/covid-19/rules
- மிகவும் பொறுமையாக இருந்துவரும் நியூ சவுத் வேல்ஸ் மக்களாகிய உங்களுக்கு நன்றி. இது ஒரு மிகவும் கடினமான நேரமாக இருந்துவருகிறது, ஆனால் ஓர் இருண்ட சுரங்கப்பாதையின் முடிவில் ஒரு வெளிச்சம் தென்படுகிறது.